**றம்புக்கன பிரதேச சபை**
**கேகாலை மாவட்டம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் 2019 பெப்ரவரி 28 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2019 மே 31 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஜுன் 21 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக் கூற்றுகளின் 2018 திசெம்பர் 31 இல் றம்புக்கன பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீடு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த நூலக புத்தகங்களுக்குரிய ரூபா 40,918 ஆன பெற்ற கழிவு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பெற்ற கழிவு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது அத் தவறை சரி செய்ய நடவடிக்கை எடுப்பதுடன், இதன் பின் இத்தகைய தவறு ஏற்படாதவாறு கவனம் எடுக்கிறேன். |
| (ii) | மீளாய்வாண்டின் போது சபை அதிகார பிரதேசத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேம்படுத்த 44 வேலைகள் தொடர்பில் நாநாவித நிதிய மூலங்களிலிருந்து கிடைத்த மூலதன உதவி ரூபா 15,255,295 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மூலதன உதவி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | குறித்த வேலைகளிற்காக மூலதன உதவி வேறொறு நிறுவனத்திற்கு கிடைத்தமையால் கணக்குகளில் உட்படுத்தவில்லை. |
| (iii) | மீளாய்வாண்டில் பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு வேலைத்திட்டத்தின் | சபைக்கு சொந்தமான சொத்துக்களை | பதில் வழங்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | கீழ் ரூபா 1,940,000 செலவில் றம்புக்கன சந்தை வளவில் நிர்மாணிக்கப்பட்ட சிறுவர் பூங்காவை மூலதனமாக்கியிருக்கவில்லை. | கணக்கீடு செய்ய வேண்டும். | |
| (Iv) | சபைக்கு சொந்தமான நிலையான வைப்புக்காக மீளாய்வாண்டில் பெற வேண்டிய வட்டி ரூபா 827,043 குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | பெற வேண்டிய வருமானத்தை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | ஒவ்வொரு நிலையான வைப்பும் முதிர்ச்சியடையும் தினத்திற்கேட்ப வட்டி தவறுதலாக கணக்கிடப்படாததுடன், இவ் வித்தியாசத்தை 2019/12/31 இன் இறுதி கணக்கு தயாரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (v) | தேசிய கடன் அபிவிருத்தி நிதியத்திலிருந்து மூன்று கருத்திட்டங்களுக்காக பெற்ற கடனுக்காக மீளாய்வாண்டு இறுதியில் செலுத்த வேண்டிய கடன் மீதி ரூபா 14,293,029 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | செலத்த வேண்டிய செலவினம் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட வெண்டும். | தேசிய கடன் அபிவிருத்தி நிதியத்திலிருந்து மூன்று கருத்திட்டங்களுக்காக பெற்ற கடனை, கடன் பெற்றுத்தந்த சந்தர்ப்பத்தில் கணக்கிடும் தவறொன்றாகையால் மேலும் பரீட்சித்து சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்கள் பிரகாரம் 06 கணக்கு விடயங்களின் மீதிகள் மற்றும் குறித்த துணைப்பதிவேடு/அறிக்கைகளிற்கிடையில் ரூபா 8,663,767 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | நிதிக் கூற்றுக்களை சரி செய்ய நடவடிக்கை எடுக்க வெண்டும். | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரையுடன் தொடர்புடைய பதிவேடுகள்/அறிக்கைகளை மேலும் பரிசீலனை செய்து வித்தியாசத்தை சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

(இ) **பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டு இறுதியில் ஓராண்டை விஞ்சிய பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 266,200 ஆனது. | அறவிடவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்கீட்டுத் தவறு காரணமாக தீர்க்கப்படாத நிமித்த கட்டுநிதி சபை தீர்மானத்தின் மூலம் பதிவலிக்க அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அபிவிருத்தி குழு கலைக்கப்பட்டு |

| | | | |
|---|---|---|---|
| | | | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு சொத்துக்களை பகிரும் போது கேகாலை பிரதேச சபையினூடாக றம்புக்கன பிரதேச சபைக்கு கிடைக்க வேண்டிய ருபா 200,000 தொடர்பாக கேகாலை பிரதேச சபைக்கு நினைவூட்டல் அனுப்பப்பட்ட போதும் அதற்காக பதில் கிடைக்கப் பெறவில்லை. |
| (ii) | மீளாய்வாண்டு இறுதியில் ஓராண்டை விஞ்சிய செலுத்த வேண்டிய கடன் கொடுத்தோரின் பெறுமதி ரூபா 2,222,890 ஆனது. | தீர்ப்பதற்கு நடவடிக்கை எடக்க வேண்டும். | கணக்காய்வு கட்டணம் செலுத்தப்பட்டது. எஞ்சிய மீதி 2017 ஆண்டிற்கு முன் இருந்து நிலவி வரவதுடன் இந்த மீதியை கண்டறிந்து செலத்த அல்லது வருமானதிதிற்கு எடுக்க தேவையான நடவடிக்கை எடுக்கிறேன். |

## 1.4 இணங்காமை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டம்<br>(i) 149 பிரிவு | இலங்கை சுற்றுலாத் துறை சபையில் பதியப்பட்ட ஹோட்டல், உணவகம் மற்றும் தங்குமிடங்களிற்கான அனுமதிப்பத்திர கட்டணம் அவற்றின் வருடாந்த விற்கனையின் ஒரு சதவீதத்தை விஞ்சக்கூடாத போதும் இனங்காணப்பட்ட 03 உணவனங்கள் மற்றும் தங்குமிடங்களில் இருந்து அவ்வாறு கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தின் ஏற்பாடு பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஓர் உணவகம் சபைக்கு உரித்துடையதல்லாததுடன் இரண்டு உணவகங்கள் மூடப்பட்டுள்ளன. ஓர் உணவகம் செலுத்துவதுடன் ஏனைய உணவகம் மற்றும் தங்குமிடங்களிலிருந்து பணம் அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |
| | (ii) 158(1)(ஆ) பிரிவு | ஓராண்டை விஞ்சிய காலம் முதல் | சட்டத்தின் ஏற்பாடு | ஓராண்டை விஞ்சிய காலமாக செலுத்தப்படாத |

| | | | |
|---|---|---|---|
| | செலுத்தப்படாத வீத வரி ரூபா 494,451 அறவிடுவது தொடர்பாக சட்டரீதயான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பிரகாரம் நடவடிக்கை க எடுக்க வேண்டும். | ரூபா 682,520 வீத வரி நிலுவையிலிருந்து சொத்துத் தடை நிகழ்சித் திட்டத்தின் மூலம் ரூபா 188,069 அறவிடப்பட்டதுடன், உரிமையாளர்களை கண்டறிய முடியாத சொத்துக்களும் இருப்பதுடன் மீதியை இவ்வாண்டிற்குள் அறவிட நடவடிக்கை எடுப்பதுடன், அறவிட முடியாத பணம் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) நிதிப் பிரமாணம் 371(2)(இ) | பெற்று கொண்ட முற்பணத்தை குறித்த வேலை பூர்த்தி ஆனவுடன் தீர்க்க வேண்டிய போதும் 2004 ஆண்டு முதல் நிலவி வரம் ரூபா 53,720 ஆன 08 முற்பண கொடுப்பனவுகள் மிளாய்வாண்டின் இறுதி வரையும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை க எடுக்க வேண்டும் | இது வரை தீர்க்கப்படாத நிமித்த கட்டுநிதியை சபை தீர்மானத்தின் பிரகாரம் பதிவழிக்க அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. |
| (ii) நிதிப் பிரமாணம் 396(ஈ) | விநியோகிக்கப்பட்ட போதும் கொடுப்பனவிற்கு சமர்பிக்கப்படாத 06 மாதங்களை விஞ்சிய ரூபா 163,922 ஆன 79 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்காததுடன் அவற்றில் ரூபா 98,650 ஆன 63 காசோலைகள் இரண்டாண்டுகளை விஞ்சியிருந்தன. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை க எடுக்க வேண்டும் | இக் காசோலைகள் தொடர்பாக குறித்த நபர்கள் மற்றும் நிறுவனங்களை எழுத்து மூலமா அறிவூட்டி முன் நடவடிக்கை எடுக்கிறேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| | (iii) நிதிப் பிரமாணம் 571(2) | 2006 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரையான காலத்திற்குரிய ரூபா 2,183,602 வைப்பு தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை க எடுக்க வேண்டும் | காலம் கடந்த வைப்புகளை வருமானத்திற்கு எடுக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இது வரை ரூபா 1,858,521 ஆன தொகையை வருமானத்திற்கு எடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (இ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய இலக்கம் 30/2016 கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் 3.1 பந்தி | சபைக்கு சொந்தமான 14 வாகனங்கள் தொடர்பாக சுற்றறிக்கை பிரகாரம் எரி பொருள் பாவனையினை பரிசீலனை செய்யதிருக்கவில்லை. . | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை க எடுக்க வேண்டும். | இரண்டு வாகனங்களின் எரி பொருள் பாவனையை துரிதமாக பரிசீலனை செய்ய நடவடிக்கை எடுப்பதுடன் ஓர் வாகனம் பழுதுபார்க்கப்பட வேண்டும். சாரதி வெற்றிடம் மீதி ஏனைய வாகனங்கள் தினந்தோரும் செலுத்தப்படாததுடன் எரி பொருள் பாவனை பரிசீலனை மேற் கொள்வது கடினமாகும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 28,461,090 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 103,452,041 ஆனது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| வருமான மூலம் | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீத வரி மற்றும் குத்தகை | 6,186,286 | 5,697,341 | 5,397,065 | 1,077,221 | 5,953,131 | 6,673,524 | 5,956,228 | 1,422,307 |
| வாடகை | 11,912,9745 | 11,800,805 | 11,322,271 | 1,011,890 | 9,382,345 | 10,007,367 | 9,891,842 | 728,303 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 4,423,360 | 4,580,776 | 4,497,986 | 82,789 | 3,787,641 | 3,971,182 | 3,966,152 | 5,030 |
| ஏனைய வருமானம் | 25,614,500 | 69,093,287 | 18,272,664 | 52,413,213 | 6,295,500 | 89,661,332 | 89,661,332 | - |

### 2.2.2 ஏக்கர் வரி

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் நிலுவை ஏக்கர் வரி மீதி ரூபா 98,697 ஆனது. | நிலுவை வருமானம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2018 திசெம்பர் 31 திகதிக்கு நிலவும் மீதிகளிலிருந்து 2019 முதல் காலாண்டுனுள் ரூபா 10,773 அறவிடப்பட்டுள்ளதுடன் தற்போது பதிவழிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் தொகை ரூபா 72,116 ஆனது. எஞ்சிய மீதியை இவ் வருடத்தினுள் அறவிட நடவடிக்கை எடுப்பதுடன் நிலுவை அறிக்கையை வருமான பரிசோதகர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### **2.2.3 கடை அறை வாடகை**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் நிலுவை கடை அறை வாடகை மீதி ரூபா 866,698 ஆனதுடன் ஓராண்டை விஞ்சிய அறவிட வேண்டிய மீதி 533,356 ஆனது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ரூபா 1,011,890 ஆன நிலுவை கடையறை வாடகை மீதியிலிருந்து ரூபா 145,192 தொகை 2019 ஆண்டு முதல் காலாண்டில் கிடைத்துள்ளது. எஞ்சிய மீதியிலிருந்து ரூபா 273,496 தொகை புதிய வியாபார கட்டிடத் தொகுதியில் கடையறைகளிலுள்ள குறைபாடுகளின் மீது வியாபாரம் செய்ய முடியாதுள்ளதால் பணம் அறவிட வேண்டாம் என குறித்த வியாபாரிகளால் கோரப்பட்டுள்ளது.அறவிட வேண்டிய வாராந்த சந்தை மற்றும் வாழை சந்தை கட்டணம் ரூபா 557,777 மீதியினுள் ரூபா |

| | | |
|---|---|---|
| | | 550,381 தொகை ஓராண்டை விஞ்சிய பழைய மீதி ஆகயால் அத் தொகை, 2018 ஆண்டிற்கு கிடைக்க வேண்டிய ரூபா 27,196 தொகை மற்றும் ரூபா 77,760 ஆன தங்குமிட கட்டணம் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்க நடவடிக்கை எடுக்க படுகிறது. எஞ்சிய நிலுவை மீதிகளை துரிதமாக அறவிட நடவடிக்கை எடுக்கபடும். |

### 2.2.4 ஏனைய வருமானம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபை அதிகார பிரதேசத்தில் அனுமதியின்றி காட்ச்சிப்படுத்தப்பட்ட 118 தற்காலிக விளம்பர பலகைகலிருந்து ரூபா 45,680 மற்றும் 03 நிலையான விளம்பர பலகைகலிருந்து ரூபா 79,500 உம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | சபைக்கு பெற வேண்டிய வருமானத்தை சேகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | இது தொடர்பாக குறித்த நிறுவனங்களை அறிவூட்டியதுடன் அதன் படி ஒரு நிறுவனத்தினால் கொடுப்பனவு செய்யப்பட்டது. எஞ்சிய நிலையான விளம்பர பலகைகளிற்காக பணம் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, அனைத்து அனுமதியற்ற விளம்பர அறிவித்தல் பலகைகளையும் வெட்டி அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது. |

### 2.2.5 நீதி மன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31 திகதிக்கு பெற வேண்டியதாக காணப்பட்ட நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 3,614,937 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 48,797,956 ஆனது. | வருமானத்தை சேகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2018 ஆண்டிற்கு நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 1,834,332 மாத்திரம் கிடைத்துள்ளது. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்கள் நலன், இலகு மற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

### (அ) செயல் நடவடிக்கை திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் செய்ய திட்டமிடப்பட்ட இயற்கை பசளை உற்பத்தி காணியில் ஊழியர்களுக்காக ஓய்வறை ஒன்றை நிர்மாணித்தல் உள்ளிட்ட 9 உத்தேச கருத்திட்டங்களை செய்திருக்கவில்லை. | செயல் நடவடிக்கை திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2018 ஆண்டிற்காக ஏற்பாடு செய்யப்பட்ட ஒதுக்கம் முடிவுற்றதால் இக் கருத்திட்டங்களை செய்ய முடியாது இருந்த போதும் நான்காண்டு திட்டப்படி இக் கருத்திட்டங்களை முன் 02 வருடங்களில் மேற்கொள்ள எதிர்பார்க்க படுகிறது. |

### (ஆ) கழிவுப் பொருள் முகாமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (i) | சபை அதிகார பிரதேசத்தில் ஒன்று சேறும் உக்களடையாத கழிவுகளை வெளியிடுவதற்காக முறையான வேலைத்திட்டமொன்று செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சுற்றாடல் பாதிப்புகளை குறைத்துக் கொள்ளக் கூடிய வகையில் கழிவு பொருட்களை முகாமை செய்ய வேண்டும். | எரிகருவியொன்றை நிர்மானிக்க மதிப்பீடு தயாரித்து கருத்திட்ட அறிக்கையொன்று மாவட்ட செயலகத்திற்கு சமர்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, அங்கீகாரம் கிடைக்கவில்லை. அது தொடர்பில் மீண்டும் கவனம் செலுத்த நடவடிக்கை எடுக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | கழிவுகளை வெளியிடுவது தொடர்பாக மத்திய சுற்றாடல் அதிகார சபையிடம் பெற்றுக் கொள்ள வேண்டிய சுற்றாடல் சான்றிதழை பெற்றிருக்கவில்லை. | கழிவுகளை வெளியிடுவதற்காக சட்டரீதியான ஏற்பாடுகளை பெற்றுக் கொள்ள வேண்டும். | சுற்றாடல் சான்றிதழை பெற்ற நடவடிக்கை எடுக்கிறேன். |

(ஆ) **நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்சி நிரல் தொடர்பாக சபை அறிந்திருந்த போதும் அந் நோக்கத்திற்கான உலகலாவிய குறிகாட்டிகளினூடாக சபை அதிகார எல்லையில் பொது மக்களின் வாழ்கை நிலை மற்றும் சுகாதாரத்தை மேன்படுத்துவதற்கான நீண்ட கால திட்டம் 2019 பெபரவாரி வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ள நீண்ட கால திட்டத்தை தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி இலக்கு திட்டத்தை துரதமாக தயாரிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |

## 3.2 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2005 ஆண்டு மற்றும் 2014 ஆண்டு காலப்பகுதியினுள் இடமாறிச் சென்ற 07 ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 155,000 இனை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அறவிட வேண்டிய கடன் மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | இடமாறிச் சென்ற ஊழியர்கள் தொடர்பாக எழுத்து மூலம் அறிவிக்கக் கோரிய போதும் பதில் கிடைக்கவில்லை. |

## 3.3 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

| | | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | i | வீத வரி தொடர்பாக ரூபா 196,000 செலவில் கணனி மென்பொருள் ஒன்று 2014 ஆண்டு அறிமுகப்படுத்தியிருந்த போதும், அந் நிகழ்சித்திட்டத்தின் மூலம் உரிய காலத்திற்கு முன் செய்யப்படும் | வருமானத்தை சரியாக கணக்கீடு செய்ய ஒழுங்கான சரியான முறைமை ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். | உரிய காலத்திற்கு முன் மேற் கொள்ளும் முன்கூட்டிய கொடுப்பனவு மற்றும் கழிவுகளை சரியாக கணக்கீடு செய்வது தொடர்பாக பிரச்சினை காணப்படுவதுடன் |

| | | | |
|---|---|---|---|
| | முன்கூட்டிய கொடுப்பனவு மற்றும் கழிவுகளை சரியாக கணக்கீடு செய்ய முடியாததால் அந் நடவடிக்கை மீண்டும் கையினால் மேற் கொள்ள மேலதிக காலம் மற்றும் ஊதியத்தியை ஈடுபடுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | | அது தொடர்பாக நிறுவனத்தை எழுத்து மூலம் அறிவூட்டி தேவையான முன் நடவடிக்கைகளுக்காக சமர்பிக்கிறேன். |
| ii | 2017 ஆண்டு மேற்கொள்ளப்பட்ட புதிய வீத வரி மதிப்பீடு பிரகாரம் நடவடிக்கை எடுக்க மீளாய்வாண்டிலும் சபைக்கு இயலாமலிருந்தது. | புதிய பெறுமதி மதிப்பீட்டை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | புதிய பெறுமதி மதிப்பீடு பற்றிய தகவல்களை மதிப்பீட்டு திணைக்களத்திடம் பெற்றுக் கொள்ள தேவையான நடவடிக்கை தற்போது செய்யப்படுவதுடன் அதன் பிரகாரம் 2020 ஆண்டில் அமுல்படுத்த முடியுமாகும். |

(ஆ) கடையறைகளை வாடகைக்கு வழங்குதல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| i | றம்புக்கன புதிய முதல் வியாபார கட்டிடத் தொகுதி 2017 செப்டம்பர் 25 திகதி திறக்கப்பட்ட போதும், அதன் கீழ் மாடியில் 8 கடையறைகள் 2019 பெபரவாரி வரை நிர்மானம் பூர்த்தி செய்யப்படாமையால் உரிய பிரதிபலனை அடைய சபைக்கு இயலாமல் இருந்தது. | நிர்மானத்தை வினைத்திறனுடன் பூர்த்தி செய்து வாடகை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | றம்புக்கன புதிய முதல் வியாபார கட்டிடத் தொகுதி 2017 செப்டம்பர் 25 திகதி ஆரம்பிக்கப்பட்ட போதும் நிர்மானம் பூர்த்தி செய்யப்படாத கீழ் மாடியின் கடையறைகளை பழைய கடையறை உரிமையாளர்களுக்கு வழங்க எடுக்கப்பட்ட தீரமானப்படி கடை உரிமையாளர்கள் அக் கடைகளை அவர்களது செலவில் செய்து கொள்ள விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு இடமளிக்கப்பட்டது. அதன் பிரகாரம் இது வரை வேளை பூர்த்தியாகியுள்ளதுடன் பணம் அறவிட தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |
| ii | புதிய இரண்டாவது வியாபார கட்டிடத் தொகுதியில் முதல் மாடியில் திறக்கப்படாத மற்றும் பூர்த்தி செய்யப்படாத 17 கடையறைகளிலிருந்து 60 சதவீதம் வீதப்படி ரூபா 14,169,257 ஒரே தடவையில் செலுத்தும் பணத்தை பெற்றிருந்த போதும் 2019 பெபரவாரி | நிரமான வேலைகளை பூர்த்தி செய்து நிலுவையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஒப்பந்த உடண்படிக்கை பிரகாரம் 06 மாதங்களினுள் வேலைகளை பூர்த்தி செய்ய வேண்டிய போதும் தற்போது 06 மாதங்கள் கடந்துள்ளதால் 2019.03.07 கடிதம் மூலம் துரிதமாக பூர்த்தி செய்யுமாறு அறிவிக்கபட்டுளளது. அதன் |

| | | |
|---|---|---|
| வரை பூர்த்தி செய்ய முடியாமையினால் எஞ்சிய ஒரே தடவையில் செலுத்தும் பணத்தை மற்றும் கடை வாடகையை அறவிட முடியாதிருந்தது. | | பிரகாரம் வேலைகள் இறுதி கட்டத்தில் உள்ளது. |

**3.4 சொத்துக்கள் முகாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உள்ளூராட்சி அமைச்சின் மற்றும் சபரகமுவ மாகாண சபையிலிருந்து கிடைத்த ரூபா 57,059,225 பெறுமதியான 24 வாகனங்களை சபைக்கு சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சொத்துக்களை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | இவ் 24 வாகனங்களையும் சுவீகரிக்க தேவையான நடவடிக்கை எதிர் காலத்தில் எடுக்கிறேன். |

**4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிக்காக பாதீட்டினூடாக ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்த 20 செலவின விடயங்களில் ரூபா 3,080,000 ஆன மொத்த ஒதுக்கீடும் 04 செலவின விடயங்களில் ரூபா 1,225,000 ஆன ஒதுக்கீட்டின் 85 சதவீதத்திற்கும் 99 சதவீதத்திற்கும் இடையிலான தொகையினை பயன்படுத்திருக்கவில்லை. | பாதீட்டை பயனுள்ள நதி கட்டுப்பாட்டுச் சாதனமொன்றாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | பாதீட்டை பயனுள்ள நதி கட்டுப்பாட்டுச் சாதனமொன்றாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கிறேன். |

**4.2 உள்ளக கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபை நடவடிக்கைகள் தொடர்பாக போதிய உள்ளக கணக்காய்வொன்றை மேற் கொண்ட போதும் அவ் | உள்ளக கணக்காய் பரிந்துரைகளை செயற்படுத்துவதனூட | உள்ளக கணக்காய்வு அறிக்கைகளினால் சுட்டிக் காட்டப்படும் |

| | | |
|---|---|---|
| அறிக்கைகளினால் சுட்டிக் காட்டப்படும் குறைபாடுகளை சரி செய்து கொள்ள தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ாக சபையின் நடவடிக்கைகளை சீர்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறைபாடுகளை சரி செய்து கொள்ள தேவையான நடவடிக்கை எடுக்கிறேன். |

## 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டினுள் கணக்காய்வு மற்றும் முகாமைத்தவ குழு கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் நடாத்தி உள்ளக கட்டுப்பாட்டை உறுதி செய்து கொள்ள வேண்டும். | 2018 ஆண்டின் இறுதி காலாண்டிற்காக 2019.02.12 திகதி கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டம் நடாத்தப்பட்டுள்ளது. |

## 4.4 தீர்க்கப்படாத கணக்காய்வு அவதானிப்பு மற்றும் பதிலளிக்காத கணக்காய்வு ஐயவினா

| | | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | | கடந்த ஆண்டு அறிக்கையினூடாக சுட்டிக் காட்டப்பட்ட பின்வரும் குறைபாடுகளை மீளாய்வாண்டிலும் சரி செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| | i | வாகனமொன்றின் பெறுமதி ரூபா 37,925 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டமை. | சீர்செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | இவ் வித்தியாசம் 2019 ஆண்டின் நிதிக் கூற்றுகள் தயாரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| | ii | நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடங்கிய சபைக்கு சொந்தமான 02 ஏக்கர் 02 ரூட் 9.45 பர்சஸ் அளவான 06 காணித் துண்டுகளின் பெறுமதி கணக்கீடு செய்யப்படாமை. | குறித்த காணியை இனங்கண்டு பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய வேண்டும். | இதனை 2019 ஆண்டின் இறுதி நிதிக் கூற்றுகள் தயாரிக்கும் போது சரி செய்யவதுடன் காணியின் பெறுமதியை நிலையான சொத்துப் பதிவேட்டிற்கு தற்போது உள்ளடக்கி அப் பெறமதியையும 2019 நிதிக் கூற்றுகள் தயாரிக்கும் போது கணக்கிட நடவடிக்கை எடுக்கிறேன். |
| | iii | காணி மற்றும் கட்டிடங்களை கணக்கீடு செய்கையில் | சீர்செய்ய வேண்டும். | தவறுதலாக சீர்செய்ய முடியாதுள்ளதுடன் 2019 நிதிக் |

| | | | |
|---|---|---|---|
| | சொத்துக்களின் பெறுமதி ரூபா 80,146,875 இனால் இரு முறை கணக்கிடப்பட்டுள்ளது. | | கூற்றுகள் தயாரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | 2016 ஆண்டு முதல் றம்புக்கன நகர அபிவிருத்தி அதிகார சபை பெயரில் நடைமுறை பொறுப்பின் கீழ் குறிப்பிடப்படும் ரூபா 76,704 ஆன மீதியை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை. | இனங்கண்டு தீர்க்க வேண்டும். | 2019 ஆண்டின் நிதிக் கூற்றுகள் மூலம் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |